1974 மார்ச் 20]

என்றும் இந்த நடனக் காட்சிகளை அறவே ஒழிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையிலே அதைத் தடை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நடனக் காட்சியை அறவே தடுப்பது என்று எந்தச் சட்டமும் போடமுடியாது. நடனக் காட்சி என்று நடத்திக்கொண்டிருக்கும்பொழுது திடீரென்று ஒரு காட்சியிலே ஆபாச நடனம் வந்துவிட்டால் அவர்கள் பெற்ற அனுமதியை அதற்குப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். நான் ஏற்கனவே சொன்னபடி அவர்கள் நிபந்தனைகளை மீறினால் உரிமத்தை ரத்து செய்யவும் அவர்கள் கொடுத்த வைப்புத் தொகையைப் பறிமுதல் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. எல்லா இடங்களிலும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லிவிடமுடியாது. விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களிலே நடைபெறுவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டு உடனடியாக நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இளைஞர் அணி.

*513 வினா—**திரு. ஜி. ராமசாமி:**

திரு. என். டென்னிஸ்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளைஞர் அணியில் பணிபுரிபவர்களுக்கு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை வழங்கப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(இ) இளைஞர் அணியில் ஓராண்டு அல்லது அதற்கு மேல் பணிபுரிந்தவர்களுக்கு அரசுப் பணிகளுக்கு நியமனம் செய்வதில் முன்னுரிமை அளிக்கப்படும்.

2. அரசுப் பணிகளுக்கு நியமனம் செய்வதற்கான உச்ச வயது வரம்பைக் கணிக்கும்போது இளைஞர் அணியில் ஆற்றிய பணிக் காலத்தை (அதிகபட்சம் இரண்டு ஆண்டுகள்) கழித்து விடுமாறு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.